2014.04.20

**வேலணை மத்திய கல்லூரி**
**பழைய மாணவர் சங்கம்**

**மிகு கௌரவத்திற்குரிய எமது பழைய மாணவர் சங்கத்தின் பேரவை பேராளர்களே, மதிப்பார்ந்த உறுப்பினர்களே,**
**அனைவருக்கும்,**

**என் இனிய வணக்கங்கள்,**

எமது கல்லூரிக்கு திருவருட்கடாட்சம் பாலிக்கும் சிவகாமி சமேத நடராசப்பெருமானின் பாதாரவிந்தங்களைப்பணிந்து தலைமையுரையினை நிகழ்த்துவதில் இறும்பூதெய்துகின்றேன். பழைய மாணவர் சங்கத்தினராகிய நாம் ஒன்று கூடுவதில் அல்லது ஒன்று கூட்டுவதில் உள்ள பொறிமுறையில் அந்த ஒழுங்கமைப்பில் சில பொறிநயத்தாழ்வு காணப்பட்டாலும் கல்லூரியின் வளர்ச்சியில் நாம் உதிரிகளாக சந்திக்கின்ற சந்தர்ப்பத்தில் ஆர்வத்துடன் பேசி கலந்துரையாடி வருகின்றமை எமக்கு மிக்க பக்கபலமாக அமைகின்றது.

**கௌரவமிக்க பேரவைப் பேராளர்களே!**
எமது கல்லூரியின் தேவைகளை நிறைவேற்றி பாடசாலையை வினைத்திறனுடன் செயற்படுத்தி விளைதிறன் மிக்க கல்லூரியாகத் திகழ வேண்டும் என்பதில் பழைய மாணவர்கள் எல்லோரும் உள்ளார்ந்த ஆர்வத்துடன் உள்ளோம் என்பது வெள்ளிடைமலையாகும். ஆயினும் இதனை செயற்பாட்டுடன் கூடியதாக வெளிப்படுத்துவதில் காலத்தை ஒதுக்குவதில் நாம் சிரமப்படுகின்றோம்.

எமது கல்லூரியின் மீண்டெழும் செயற்பாடுகளுக்கும் சில விசேட தேவைகளுக்கும் ஊட்டமளிக்க வேண்டிய தேவையுள்ளது. சில தேவைகளை எமது பழைய மாணவர் சங்கங்களின் மூலம் நிறைவேற்றி வருகின்றோம். சில செயற்பாடுகளை நிறைவு செய்வதில் தேர்வுகளின் பல்வகைமை காரணமாக வழிமுறைகள் முரண்படுகின்றன. ஆனால் தேவையோ அல்லது இலக்கோ முரண்பாட்டிற்குரியதல்ல என்பதனை நாம் உணர்ந்து கொள்கின்றோம்.

வெளிப்படைத்தன்மையையும், வகைகூறலையும், சமவாய்ப்பினையும், மையப்படுத்தி வாய்மை, தூய்மை, செம்மை, பொறுமை, திண்மை வழியில் கல்லூரியின் வளர்ச்சிக்காக திடசித்தத்துடன் செயற்படவேண்டியுள்ளது. இந்நெறியில் செல்கின்றபோது சில வேளைகளில் எமது கௌரவத்தின் வினாவுகளையும்,சவால்களையும் எமது இயல்பான மனித உணர்வுகளுக்கு அப்பால் சகித்துக்கொண்டு கல்லூரியின் வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும் என்ற மாபெரும் சக்தியினை வழங்கும் நம்பிக்கை என்ற உன்னதத்திற்கு தலைசாய்க்கின்றேன்.

மனிதன் பிரபஞ்ச ஒருமை நிலையிலிருந்து விடுபட்டு சமூக கட்டுமானத்தை தகர்த்து அந்நியப்பட்டு இருத்தலியல் முரண்பாட்டினதும் வரலாற்று முரண்பாட்டினதும் வேறுபாடுகளை அறியாது தீர்வு காணக்கூடிய வரலாற்று முரண்பாடுகளை இருத்தலியல் முரண்பாடாகவும் தனித்துவமாக ஏற்றுக்கொள்ள வேண்டிய இருத்தலியல் முரண்பாடுகளை வரலாற்று முரண்பாடுகளாகவும் காட்டி சரிக்கட்டுவதில் முரண்டு பிடிக்கின்றான்.

இந்நிலையிலே சுதந்திரத்தின் உன்னதத்தை அனுபவிக்கின்ற சமுதாயமாக எதிர்காலத்தை வழிகாட்டுவதற்காக கல்லூரிச்செயற்பாடுகள் மிக நுட்பமான பொறிமுறைகளை வகுத்துக்கொள்ளல் வேண்டும். வெறுமனே உரிமைகள் என்ற வரிகளை மட்டும் உச்சரிக்காமல் உரிமைகளுக்கு பெறுமதி அளிக்கின்ற கடமைகளின் செம்மையை நாம் வரித்துக்கொள்ள வேண்டும். சுயகௌரவத்திற்கு அப்பால் பரஸ்பரம் மனித உள்ளத்தின் உணர்வுகளுக்கு வெகுமதி அளிக்கப்பழகிக் கொள்ளல் வேண்டும். கடமைகளைத்தவறுதலும் மற்றவர்களின் கௌரவத்திற்கு சவால்விடுகின்ற மனப்பாங்கும் சுதந்திரத்தின் உன்னதத்தை அனுபவிக்காமல், மாறாக சுதந்திரத்தின் மீதான பயத்தினை வெளிக்காட்டி நிற்கின்றது. இவற்றிலிருந்து மனித சமுதாயத்தை விடுவிப்பதற்கான கல்வி வாய்ப்புக்களை வழங்க வேண்டியுள்ளது.

கட்டுப்பாடுகளால் கட்டுப்படுத்தாது சுதந்திரத்தின் உன்னதம் மற்றவர்களுக்கு சேவை செய்வதுதான் என்ற உண்மையினை உணரவைப்பதன் மூலம் **சுயகட்டுப்பாடு** மிக்கதான சமூகத்தைக் நோக்கி பயணிக்க நாம் அனைவரும் கரம் இணைவோம்.

நன்றி

---

வேலணை மத்திய கல்லூரி
பழைய மாணவர் சங்கம்

மதிப்பார்ந்த பழைய மாணவர் சங்கத்தின் பேரவை உறுப்பினர்களே,
அனைவருக்கும்,

***வணக்கம்,***

## *கல்லூரி நிலவர அறிக்கை*

**“எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்தநல்லறிவு வேண்டும்
பண்ணிய பாவ மெல்லாம்
பரிதிமுன் பனியே போல
நண்ணிய நின்முனிங்கு
நசித்திடல் வேண்டு மன்னாய்”**

மகாகவியின் வரிகளில் சக்தியை வணங்கி கல்லூரி நிலவர அறிக்கையினை தங்களுக்கு சமர்ப்பிப்பதில் நிறைவு காண்கின்றேன்.

வேலணை மத்திய கல்லூரியின் பழைய மாணவர்கள், மற்றும் தீவக மண்ணின் மைந்தர்கள் கல்லூரியின் வளர்ச்சிக்காக அரும்பாடுபடும் தோழமைமிக்க அனைவருக்கும் கல்லூரி நிலவர அறிக்கையினை சமர்ப்பிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

நாம் இரு தாய்மார்களை எண்ணி தினமும் குதூகலிப்போம். பரவசமடைவோம். ஒன்று எம்மை கருவறையில் சுமந்து பாலூட்டி வளர்த்த தாய். மற்றவர் எம்மை வகுப்பறையில் சுமந்து அறிவூட்டி வளர்த்த தாய். எத்தனை வகையான புட்டிப்பால் குடித்தாலும் தாய்பாலுக்கு எதுவுமே ஈடாகாது. அவ்வாறே எத்தனை வாய்ப்புக்கள் எமக்கு அறிவு பெற சந்தர்ப்பங்கள் கிடைத்தாலும் பாடசாலைக்காலம் என்றும் பசுமையானதாகவே இருக்கும்.

அவ்வாறு எமக்கு களம் தந்து புடமிட்ட வேலணை மத்திய கல்லூரி அன்னையினை என்றும் போற்றி வணங்கும் மைந்தர்கள் பாரெங்கும் பரவி வான் தொட்டுயர்ந்து மிளிர்கின்றமையால் வேலணை மத்திய கல்லூரி அன்னை இன்னமும் ஆயிரம் ஆயிரம் புதல்வர்களுக்கு அறிவுப்பசி தீர்த்து அகமகிழ்ந்து வழிமேல் விழி வைத்து காத்திருக்கின்றாள்.


அன்னையின் புதல்வர்கள் அன்னையைப் போசித்து ஆரோக்கியமாக வைத்திருக்கின்றார்கள்.

பேரன்புமிக்க பழைய மாணவர்களே!

வேலணை மத்திய கல்லூரியின் வளர்ச்சி தான் தீவகப்பிரதேசம் முழுவதற்குமான மேம்பாட்டிற்கு அடித்தளமாக அமையும் என்பது வெள்ளிடைமலை ஆகும்.


எமது கல்லூரியில் தற்போது **799** மாணவர்கள் கற்கின்றார்கள். இவ்எண்ணிக்கை தீவகப்பாடசாலைகளில் முதன்மையானதாகும். மேலும் எமது கல்லூரி 1AB Super School ஆக 2013 யூலை மாதம் முதல் தரமுயர்த்தப்பட்டுள்ளது. எமது கல்லூரியில் விஞ்ஞானத்தொழில் நுட்பப்பாடத்துறை க.பொ.த உயர்தர வகுப்பிற்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேலும் கடந்த பல வருடங்களாக விஞ்ஞான கணிதப்பிரிவுகளில் மாணவர்கள் இல்லாமல் இருந்தனர். சென்ற வருடத்திலிருந்து கணித விஞ்ஞான பிரிவுகள் மிகக்குறைவான மாணவர்களுடன் ஆரம்பித்துள்ளோம். இதனை மேம்படுத்துவதற்கு பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை நாம் வகுத்து செயற்படுத்த வேண்டியுள்ளது. இதற்கு அனைவரினதும் ஆசிகள் நிறைவாக வேண்டும்.

## மாணவர் எண்ணிக்கைப் பரம்பல்




| | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Gr6 | 61 | 61 | 58 | 48 | 69 | 97 | 81 | 102 | 88 | 82 | |
| Gr7 | 59 | 63 | 61 | 65 | 54 | 96 | 95 | 85 | 91 | 94 | |
| Gr8 | 69 | 65 | 63 | 62 | 62 | 75 | 89 | 93 | 84 | 102 | |
| Gr9 | 73 | 55 | 67 | 62 | 64 | 89 | 75 | 92 | 100 | 85 | |
| Gr10 | 72 | 60 | 57 | 58 | 100 | 103 | 92 | 73 | 95 | 103 | |
| Gr11 | 79 | 93 | 65 | 81 | 99 | 119 | 121 | 116 | 155 | 156 | |
| G.C.E.(A/L) | 130 | 137 | 139 | 121 | 132 | 144 | 198 | 214 | 158 | 177 | |
| Total | 543 | 534 | 510 | 497 | 580 | 723 | 751 | 781 | 771 | 799 | |

## ஆசிரியர் மாணவர் விகிதம்





| | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Ratio | 1:12 | 1:13 | 1:10 | 1:10 | 1:13 | 1:15 | 1:17 | 1:20 | 1:22 | 1:22 |


எமக்கு 45 ஆசிரியர்கள் தேவை தற்போது 39 ஆசிரியர்கள் உள்ளனர். அவர்களில் 4 ஆசிரியர்கள் கற்கை விடுமுறையிலும் 3 ஆசிரியர்கள் மகப்பேற்று விடுமுறையிலும் உள்ளனர்.
மேலும் கணிதபாடத்திற்கு 3 ஆசிரியர்களும், விஞ்ஞான பாடத்திற்கு 3 ஆசிரியர்களும், தமிழ்பாடத்திற்கு 1 ஆசிரியரும் பற்றாக்குறை நிலவுகின்றது.

இத்தகைய பின்னணியிலும் எமது மாணவர்களின் கற்றல் அடைவுகள் அபரிமிதமான வளர்ச்சியில்லாவிட்டாலும் குறிப்பிடத்தக்க மேம்பாடு கண்டு வருகின்றது.

**க.பொ.த சாதாரண அடைவு**


**Learning Achievements G.C.E (O/L) Exam 2008-2013 Percentage of Pass**





**க.பொ.த உயர்தரம் அடைவு**


**Learning Achievements G.C.E (A/L) Exam 2008-2013**
**Arts stream Percentage of Pass**





**Learning Achievements G.C.E(A/L) Exam 2008-2013**
**Commerce stream Percentage of Pass**

➢ கடந்த க.பொ.த உயர்தரத்தில் 3 மாணவர்கள் உயிரியல் விஞ்ஞானத்துறைக்கு பரீட்சைக்கு



தோற்றினார்கள். ஆயினும் எவரும் ஒரு பாடத்திலேனும் சித்தியடையவில்லை. இவ்வருடம் கணிதப்பிரிவில் 2 மாணவர்களும், உயிரியல் விஞ்ஞானத்துறையில் 4 மாணவர்களும் பரீட்சைக்கு தோற்றுகின்றார்கள் அவர்கள் அனைவரும் சித்தி அடைவார்கள் என்று நம்பிக்கை கொள்கின்றோம்.

## பாடசாலை மாணவர்களின் ஒழுக்கம்

மாணவர் வரவு ஒழுங்கு அவதானிக்கப்படுகிறது. கட்டாயக் கல்விக் குழுவினால் மாதாந்தம் 20% இற்குக்குறைவான மாணவர்கள் பற்றிய தகவல்களைத் திரட்டி பெற்றோருக்கும் கிராம சேவையாளருக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றது. மாதாந்தம் மாணவர் வரவு வீதம் காட்சிப்படுத்தப்பட்டு மாணவர் வரவு ஒழுங்கு மேம்படுத்தப்பட்டு வருகின்றது.

மாணவர் தாமத வருகை குறைக்கப்பட்டுள்ளது. கிரமமாக மாணவர் தாமத வருகை பதிவு செய்யப்பட்டு வருகின்றது. அடிக்கடி தாமதமாக வருகை தரும் மாணவர்களின் பெற்றோர் பாடசாலைக்கு வரவழைக்கப்பட்டு அறிவுறுத்தப்படுகின்றனர். தாமத வருகை தோட்டவேலை காலங்களில் அதிகமாக அவதானிக்கப்பட்டுள்ளது. இச்சந்தர்ப்பத்தில் மாணவர்களுக்கு அறிவுறுத்துதல்கள் வழங்கப்படுகின்றது. தாமத வருகை வெகுவாக குறைந்துள்ளது.

மாணவர் சுகாதாரம் தொடர்பாக தினமும் அவதானிக்கப்பட்டு நகம் வெட்டுவதற்கும் ஆண் மாணவர்கள் தலைமுடியை சீராக வெட்டுவதற்கும் ஒழுங்காக சீவுவதற்கும் வழிகாட்டுதல்கள் மாணவர் ஒழுக்காற்றுச்சபையினாலும் மாணவர் முதல்வர் சபையினாலும் வழிகாட்டுதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவற்றில் அக்கறை காட்டாத மாணவர்களின் பெற்றோர்கள் வரவழைக்கப்பட்டு அறிவுறுத்தப்படுகின்றனர். சில மாணவர்கள் உடனடியாக முடிதிருத்தும் நிலையத்துக்கு அனுப்பப்பட்டு சீர் செய்யப்படுகின்றார்கள்.

மாணவர்களின் சீருடை மற்றும் சப்பாத்து பாதணி தொடர்பாக தினமும் வகுப்பாசிரியர்கள், பகுதித்தலைவர்கள் மற்றும் மாணவர் முதல்வர்களினால் அவதானிக்கப்பட்டு சீர் செய்யப்படுகின்றது. சில மாணவர்கள் நாகரிகப்போக்கு காரணமாக சீருடைகளில் தவறு விடும்போது பெற்றோர்கள் வரவழைக்கப்பட்டு அறிவுறுத்தப்படுகின்றனர். சில மாணவர்கள் பாடசாலையில் சிறிது நேரம் சிரமதானம் செய்வதற்கு ஊக்குவிக்கப்படுகின்றார்கள்.
வசதிக்குறைவினால் சீருடை அழுக்காக வரும் மாணவர்கள் கட்டைச்சட்டை போடும் மாணவிகள் அவதானிக்கப்படுகின்றார்கள். அவர்களுக்கு சீருடை இலவசமாக வழங்குவதற்கு வேலணை ஒன்றியத்தின் உதவி கோரியுள்ளோம். இதற்காக ஆர்வமுள்ள நலன் விரும்பிகளின் ஆதரவினை வரவேற்கின்றோம்.

மாணவர்களின் பருவ வயது உந்துதல் காரணமான தவறுகள் மிகமிக அரிதாகவே காணப்படுகின்றது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் விசேட வழிகாட்டுதல்கள் பொறுப்பாசிரியர்களினால் மேற்கொள்ளப்படுகின்றது. இத்தகைய மாணவர்களின் சுயகௌரவம் பாதிக்கப்படாத வகையில் மிக நுட்பமான பொறிமுறையினூடாக அவர்களின் ஆக்கச்செயற்பாடுகள் மூலம் திசைப்படுத்தப்படுகின்றார்கள். மரம் நடுதல் படம் வரைதல் கதை கவிதை எழுதுதல் ஆகிய செயற்பாடுகளுக்கு அவரவர் ஆற்றலுக்கு ஏற்ப திசைமுகப்படுத்தப்படுகின்றது. அத்துடன் பெற்றோர்கள் வரவழைக்கப்பட்டு வழிகாட்டுதல் ஆலோசனை வழங்கப்படுகின்றது.

## பழைய மாணவர் சங்கங்களின் செயற்பாடுகள்

### 1. கொழும்பு பழைய மாணவர் சங்கம்

- 2011.07.15 இல் விடுதிக்கு தேவையான தளபாடங்களை கொள்வனவு செய்வதற்கு ரூபா 150 000 விடுதிச் செயற்பாட்டுக்கணக்கில் வைப்புச்செய்தனர்.
- ரூபா 50 000 செலவில் விடுதி வேலியினை அமைத்து தந்தனர்.
- பாடசாலை பின்புறம் உள்ள காணிக்கு 150 லோட் மண் பறிப்பதற்கு
ரூபா 63 750 பாடசாலை அபிவிரத்திச்சங்கத்திற்கு வழங்கி உதவினார்கள்.
- ஒவ்வொரு வருடமும் ஆசிரியர் தினத்தில் ஆசிரியர்களுக்கு பரிசில்கள் வழங்கி கௌரவித்து வருகின்றனர்.

- அலுவலக உதவியாளருக்கு மாதாந்தம் ரூபா 10 000 வழங்கி வருகின்றனர்.

## 2. பிரான்ஸ் பழைய மாணவர் சங்கம்

- மாதாந்தம் நூலக உதவியாளருக்கு ரூபா 5 000 கொடுப்பனவு வழங்கி வருகின்றார்கள்
- மாதாந்தம் இன்ரநெட் தவணைக்கட்டணம் செலுத்தி வருகின்றார்கள்
- 2011.07.27 இல் விடுதிச்செயற்பாட்டுக்கணக்கில் ரூபா 232 500 வழங்கினார்கள்
- வருடாந்தம் தரம் 6 இல் புதிதாக இணையும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்கி வருகின்றார்கள்.
- 2014.01.19 ஆந்திகதி புல்லு வெட்டும் இயந்திரம் அன்பளிப்புச்செய்தார்கள்
- 10 ஒப்பனை நகை செட் அன்பளிப்புச்செய்தார்கள்
- மேலைத்தேச வாத்திய அணிக்கான சீருடை அன்பளிப்புச்செய்தார்கள்.
- பாடசாலை முகப்பு நுழைவாயில் அமைத்து கல்லூரிக்கு அழகு செய்துள்ளார்கள்

## 3. பெரிய பிரித்தானியா பழைய மாணவர் சங்கம்

**விடுதிச்செயற்பாட்டிற்கான முழுப்பொறுப்பினையும் ஏற்று செயற்பட்டு வருகின்றது.**

- 2011.09.28 இல் விடுதிச் செயற்பாட்டு நிதியாக ரூபா 107 240 வழங்கினார்கள்
- 2012.03.28 இல் விடுதிச் செயற்பாட்டு நிதியாக ரூபா 92 000 வழங்கினார்கள்
- 2012.09.01 இல் விடுதிச் செயற்பாட்டு நிதியாக ரூபா 105 020 வழங்கினார்கள்
- 2013.03.13 இல் விடுதிச் செயற்பாட்டு நிதியாக ரூபா 188 950 வழங்கினார்கள்
- 2013.07.17 இல்விடுதிச் செயற்பாட்டு நிதியாக ரூபா 196 910 வழங்கினார்கள்
- 2014.04.07 இல் விடுதிச் செயற்பாட்டு நிதியாக ரூபா 216 150 வழங்கினார்கள்

## 4. கனடா பழைய மாணவர் சங்கம்

- 2012.02.29 இல் ரூபா 140 100 பெறுமதியான 11 அலுவலக அலுமாரிகள் விரிவுரையாளர் திரு ந. பேரின்பநாதன் ஊடாக அன்பளிப்பச்செய்தார்கள்
- 2012.04.21 இல் தமிழ்த்தின விழாவிற்காகவும் அறிவித்தல் பலகை அன்பளிப்பாகவும் ரூபா 40 000 வழங்கினார்கள்
- **தரம் 6 – 11 ஆம் வகுப்பு மாணவர்களுக்கான பரிகார கற்பித்தல் செயற்றிட்டம்**
  பரிகார கற்பித்தல் செயற்றிட்டம் 2013 ஏப்ரல் மாதத்திலிருந்து செயற்படுத்தப்பட்டு வருகின்றது.
- **கல்லூரியின் உயர்தர விஞ்ஞானப்பிரிவு மாணவர்களுக்கான நிதி உதவித்திட்டம்**
  க.பொ.த உயர்தரம் விஞ்ஞானப்பிரிவில் கற்கும் மாணவர்களுக்கு மாதாந்தம் ரூபா 2 000 வழங்கி வருகின்றார்கள்.

- **பல்கலைக்கழக மாணவர்களுக்கான நிதி உதவித்திட்டம்**

  எமது கல்லூரியில் கற்று பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை மெற்கொள்ளும் மாணவர்களுக்கு மாதாந்தம் ரூபா 3 000 வழங்கி வருகின்றார்கள்

## 5. அவுஸ்ரேலியா பழைய மாணவர் சங்கம்

**வகுப்பில் முதன்மை மாணவர்களுக்கு மாதாந்தம் புலமைப்பரிசில் வழங்கி வருகின்றார்கள்**

- தரம் 6 – தரம் 9 வரையான ஒவ்வொரு வகுப்பிலும் உள்ள முதல் மாணவர்களுக்கு மாதாந்தம் ரூபா 1 000 உம், தரம் 10 – தரம் 11 வரையான ஒவ்வொரு வகுப்பிலும் உள்ள முதல் மாணவர்களுக்கு மாதாந்தம் ரூபா 1 500 உம், க.பொ.த உயர்தர மாணவர்களுக்கு ஒவ்வொரு வகுப்பிலும் உள்ள முதல் மாணவர்களுக்கு மாதாந்தம் ரூபா 2 000 உம் வழங்கி வருகின்றார்கள்.

**கொழும்பில் வசிக்கும் வேலணை கிழக்கு சார்ந்த** திரு. பொன்னம்பலம் இராமநாதன்

- கொழும்பு பழைய மாணவர் சங்கத்தின் முன் முயற்சியினால் தண்ணீர்த்தாங்கி அமைத்து மோட்டார் பொருத்தி நீர்வழங்கலை மேற்கொள்வதற்கு பாடசாலை அபிவிருத்திச்சங்கத்திற்கு ரூபா 600 000 வழங்கினார்

**லண்டனில் வசிக்கும் பள்ளம்புலம் சார்ந்த** திரு.கைலாயபிள்ளை திருநீலகண்டன்

- உதைபந்தாட்ட Goal Box செய்வதற்கு ரூபா 100 000 பாடசாலை அபிவிருத்திச்சங்கத்திற்கு வழங்கினார்.
- ரூபா 478 000 பெறுமதியான (HP 3330 MT Desktop Pc Intel Dual core 2020/2GB Ram/500GBHDD/18.5, LED Monitor ) 5 கணனிகள் அன்பளிப்புச் செய்தார்.
- ரூபா 22 500 பெறுமதியான 5 UPS வழங்கினார்கள்.
- ரூபா 728 000 பெறுமதியான Duplo Digital Duplicator DP – J450 stand for Duplex Digital Duplicators அன்பளிப்புச்செய்துள்ளார்.

**வேலணை மேற்கு சார்ந்த கொழும்பில் வசிக்கும்** திரு சிவசரணம் குகநாதன்

- அலுவலக தேவைக்காக 20 பிளாஸ்ரிக் கோப்புக்கள் வழங்கினார்.
- கல்லூரியின் city rite Bus இற்கான 4 ரயர்களையும் புதிதாக வழங்கினார்.
- கல்லூரியின் முகப்பில் சரஸ்வதிதேவி சிலை அமைத்து பொலிவு செய்தார்.

**புளியங்கூடல் சார்ந்த கனடாவில் வசிக்கும்** திரு. முருகேசு திருமொழி

- ஒலிவாங்கி 1 உம் ஒலிபெருக்கிப்பெட்டி 1சோடியும் வழங்கினார்.

**சரவணை கிழக்கு சார்ந்த பிரான்ஸில் வசிக்கும்** திரு.சோமசுந்தரம் கந்தசாமி

- விடுதிச்செயற்பாட்டு நிதியாக ரூபா 10 000 வழங்கினார்.

**கரம்பொன் சார்ந்த லண்டனில் வசிக்கும்** திரு சிவனடியான் சிறீபதி

- விடுதிச் செயற்பாட்டு நிதியாக ரூபா 30 000 வழங்கினார்.

**வேலணை வடக்கு சார்ந்த அமெரிக்காவில் வசிக்கும் Dr. சபா குலோத்துங்கன்**

- விஞ்ஞான தினச்செயற்பாட்டு நிதியாக $ 250 பாடசாலை அபிவிருத்திச்சங்கத்திற்கு வழங்கினார்.

## புலமைப்பரிசில் நிதியங்கள்

**கொழும்பு பழைய மாணவர் சங்கத்தினரால் முன்னெடுக்கப்பட்ட அமரர் தம்பு ஞாபகார்த்த புலமைப்பரிசில் நிதியம்**

இந்நிதியத்தின் மூலம் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு ரூபா 10 000 வழங்கப்படுகின்றது. இத்திட்டப்பொறிமுறை மீளாய்வு செய்து மேம்படுத்த வேண்டியுள்ளது.

**வேலணை மேற்கு திருநாவுக்கரசு தர்மலட்சுமி ஞாபகார்த்த புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம்**

இந்நிதியத்தின் மூலம் வறுமை நிலையில் உள்ள கற்றலில் ஆர்வமுள்ள மாணவர்களுக்கு ஒவ்வொரு தவணையும் கற்றல் ஊக்குவிப்பு உதவிப்பணம் வழங்கப்படுகின்றது.

**சரவணையூர் பண்டிதர் இராசையா ஞாபகார்த்த புலமைப்பரிசில் நிதியம்**

சரவணையூர் பண்டிதர் எமது கல்லூரியின் முன்னாள் ஆசிரியர், பிரதி அதிபர், அதிபர் அமரர் க.இராசையா அவர்கள் ஞாபகார்த்தமாக இடைநிலைப்பிரிவில் விஞ்ஞான பாட மேம்பாட்டை ஊக்குவிப்பதற்காக இடைநிலைப்பிரிவில் விஞ்ஞான பாடத்தில் 75 புள்ளிகளுக்கு மேல் பெறும் அனைத்து மாணவர்களுக்கும் ஒவ்வொரு தவணையும் கற்றல் ஊக்குவிப்பு நிதி வழங்குவதற்கான திட்டத்தினை அமரரின் உறவினர்கள் முன்மொழிந்து செயற்பட்டு வருகின்றனர். இவ்வருடத்தில் இப்புலமைப்பரிசில் திட்டம் செயற்பாட்டிற்கு வரும்.

## மரநடுகைக்கு உதவியோர்

அமரர் நாகையா மகேந்திரன்

திரு.கு.பாலகிருஸ்ணன் அவர்கள் இலங்கை செஞ்சிலுவைச்சங்கத்தின் செயற்றிட்டத்தில்.

திரு.இ.சிவதாஸ்

திரு. து. திருக்குமார்

கொழும்பு பழைய மாணவர் சங்கம்

பிரான்ஸ் பழைய மாணவர் சங்கம்

ஆசிரியர்கள், மாணவர்கள்

**கல்வித்திணைக்களத்தின் அனுசரணையுடன் அரசாங்கத்தினால் செய்யப்பட்ட பௌதீக வள சேவைகள்**

- வடக்கின் மீள் எழுச்சித்திட்டத்தின் கீழ் முன்புறம் மேற்குப்பக்கமாக உள்ள மேல்மாடி திருத்தம் செய்யப்பட்டு நூலகம் செயற்படுகின்றது.
- முன்னர் பெண்கள் விடுதியாக இருந்த கட்டிடம் புனரமைப்பு செய்யப்பட்டு ஆண்கள் விடுதியாக இயங்குகின்றது.

- உலக உணவுத்திட்டத்தின்கீழ் சமையற்கூடம் அமைக்கப்பட்டது.
- நவோதயா திட்டத்தில் தரம் 6 வகுப்பறை திருத்தம் செய்யப்பட்டது
- நவோதயா திட்டத்தின் கீழ் பிரதான கட்டிடத்தின் கீழ்பகுதிக்கு அலுமினிய சட்டத்தின் மூலம் கண்ணாடி பொருத்தப்பட்டு கீழ்த்தளம் முழுவதற்குமான மின் இணைப்பு வழங்கப்பட்டது.
- கல்லூரியின் பயன்பாட்டிலில்லாத பழைய ஆண்களுக்கான மலசல கூடம் திருத்தம் செய்யப்பட்டது.

**SDMG செயற்றிட்டத்தின் கீழ்**

- மனைப்பொருளியற்கூடத்திற்கு சீற் அடிக்கப்பட்டுள்ளது.
- விஞ்ஞான ஆய்வுகூடத்திற்கான மின் இணைப்புக்கள் வழங்கப்பட்டது.
- பழைய தண்ணீர்த்தாங்கியும் மோட்டார் அறையும் திருத்தம் செய்யப்பட்டது.
- வகுப்பறைகளுக்கு காட்சிப்பலகை அமைக்கப்பட்டது.
- பயன்பாட்டிலுள்ள மலசலகூடங்கள் திருத்தம் செய்யப்பட்டது.
- பாடசாலை முன்புறம் மின் ஒளி வசதி செய்யப்பட்டது.
- நீர்வழங்கல் விரிவாக்கம் செய்யப்பட்டது.
- பச்சை வீடு அமைக்கப்பட்டது

**பாடசாலை அபிவிருத்திச்சங்க நிதி மூலம் செய்யப்பட்ட பணிகள்**

- தரவட்டக்குடில் அமைக்கப்பட்டது
- விடுதி முன்புறம் விருந்தினர் சந்திப்புக்கூடம் அமைக்கப்பட்டது
- பாடசாலையில் மூடப்பட்டுக்கிடந்த கிணறு தோண்டப்பட்டு கட்டுமானம் செய்யப்பட்டது.
- சிறிய city rite Bus வாகனத்திற்கான பாதுகாப்பான தரிப்பிடம் அமைக்கப்பட்டது.
- கல்லூரி கொடிக்கம்ப பீடம் அமைக்கப்பட்டது
- கல்லூரி ஆலயத்தைச்சுற்றி மணல் இடப்பட்டது.
- குடிநீர் வழங்கல் திருத்தங்கள் செய்யப்பட்டது.
- மின்சார கட்டணம் செலுத்துதல் மற்றும் மின்சார இணைப்புத்திருத்தங்கள் செய்யப்பட்டது.
- தொலைபேசி கட்டணம் செலுத்தப்படுகின்றது.
- பாடசாலை பிரதான அரங்கின் கூரை திருத்தம் செய்யப்பட்டது.
- கோட்ட மட்ட வலய மட்ட போட்டிகளுக்கான மத்தியஸ்தர் கட்டணம் மற்றும் இதர செலவுகளுக்கான நிதி வழங்கப்பட்டது.
- மதிய உணவிற்கான விறகு கொள்வனவு செய்யப்படுகின்றது.

- **1000 பாடசாலைத்திட்டம்**

இத்திட்டத்தின் கீழ் 60X30 பரிமாணமுள்ள மஹிந்தோதயா ஆய்வு கூடம் கல்லூரி முன்புறம் அமைக்கப்பட்டு நிறைவு காண்கின்றது.

- **விஞ்ஞானத்தொழில்நுட்ப பாடத்துறை**

க.பொ.த உயர்தரத்தில் விஞ்ஞான தொழில் நுட்பபாடத்துறை 2013 யூலை மாதம் ஆரம்பிக்கப்பட்டதன் மூலம் எமது கல்லூரி 1AB Super School ஆக 2013 யூலை மாதம் முதல் தரமுயர்த்தப்பட்டுள்ளது. 90X30 பரிமாணமுள்ள மூன்று மாடி கொண்ட விஞ்ஞானத் தொழில் நுட்ப ஆய்வுகூடம் கட்டுவதற்கான முன் ஆயத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**நமக்காக நாம் .....**

- மாணவர்கள் பெற்றோர்கள் ஆசிரியர்கள் இணைந்து 9 வகுப்பறைகளுக்கு வர்ணம் பூசி அழகு செய்தார்கள்.
- க.பொ.த உயர்தர மாணவர்கள் செயற்றிட்டம் செய்வதற்கு ஊக்கப்படுத்தப்படுகின்றார்கள்.

**பிரயத்தனங்கள் கைகூடிட ....**

- எமது பிரதான மண்டப அரங்கு கூரையில் 2005 ஆம் ஆண்டில் இருந்து ஒழுக்குஉள்ளது. அக்கூரையினைத்திருத்துவதற்கும் பிரதான மண்டபத்தின் கதவுகளை திருத்தம் செய்வதற்கும் கல்வித்திணைக்களம் ஊடாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதற்கான முன்மொழிவுகள் யாழ் அரசாங்க அதிபருக்கு சமர்ப்பிக்கப்பட்டு சாதகமான பதில் எதிர்பார்க்கப்படுகின்றது. 2013 நவம்பர் மாதம் ரூபா 50 000 செலவில் கூரை திருத்தம் பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தால் செய்யப்பட்டு ஒழுக்கு நிறுத்தப்பட்டுள்ளது. ஆயினும் முழுமையான திருத்தம் செய்யப்படல் வேண்டும்.
- கல்லூரிக்கு கௌரவ ஆளுஞர் அவர்களினால் வழங்கப்பட்ட சிறிய city rite Bus வாகனத்திற்கான பாதுகாப்பான தரிப்பிடம் இன்மையால் அதன் பின்புறக்கண்ணாடி விரும்பத்தகாத இனம் தெரியாதவர்களினால் சேதப்படுத்தப்பட்டது. இதன்பின்னர் பாதுகாப்பான தரிப்பிடம் அமைக்கப்பட்டு தற்போது வாகனம் பாதுகாப்பாக தரிப்பிடத்தில் விடப்பட்டுள்ளது. இத்தரிப்பிடத்தை அமைப்பதற்கு மரங்களும் சீற்றும் கல்லூரியில் இருந்தது பயன்படுத்தப்பட்டது. சீமெந்த், மணல், கல் மற்றும் கேற், கூலி என்பனவற்றிக்கான கொடுப்பனவுகள் பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தின் நிதியிலிருந்து ஈடு செய்யப்பட்டது. கொங்கிறீட் தரைஅமைக்கப்பட்டு முன்புறம் பூசி வர்ணம் பூச வேண்டியுள்ளது.
  அத்துடன் கண்ணாடி அதிபரின் முற்பணத்தில் ரூபா36 000 செலவில் பொருத்தப்பட்டுள்ளது. பாடசாலைப் பேருந்து, ஓட்டோ என்பவற்றை பயன்படுத்துவதற்கு சாரதி சம்பளம், எரிபொருட்செலவு, தேய்மான திருத்தச்செலவு என்பவற்றிற்கு நிதி ஒதுக்கீடு எதுவுமில்லை. இதனைப் பழைய மாணவர் சங்கம் பொறுப்பெடுத்துக் கொண்டால் இவற்றைப்பயன்படுத்த முடியும்.
- பாடசாலை நூலகத்திருத்தம் மற்றும் கட்டிடத்திருத்த வேலைகளின் போது கழற்றப்பட்டு விஞ்ஞான ஆய்வு கூடத்திற்கு பின்னுள்ள அறையில் பெருமளவு மரங்களும் ஓடுகளும் ஒழுங்கற்ற முறையில் குவிந்து கிடந்தன. அதனுள் பெருமளவு பாம்புகளும் காணப்பட்டன. இது மாணவர்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக காணப்பட்டது. எனவே இப்பொருட்களை பயனுள்ள முறையில் அகற்ற வேண்டும் என்று தீர்மானித்தோம்.
  க.பொ.த உயர்தர மாணவர்கள் இடைவேளையின் போது மாணவர்கள் மலசலகூடம் செல்லும் வழியில் உள்ள ஓடையினுள் நின்று கதைப்பதும் அவதானிக்கப்பட்டது.
  குழுக்கலந்துரையாடல் செய்வதற்கும் தரவட்டசெயற்பாடுகளுக்கும் ஒரு வட்டக்குடில் பொருத்தமாக இருக்கும் என்று அவதானிக்கப்பட்டது. இவற்றின் அடிப்படையில் தரவட்டக்குடில் Quality Circle Cut அமைக்கப்பட்டு முன்னாள் வலயக்கல்விப்பணிப்பாளர் உயர்திரு ராதாகிருஸ்ணன் அவர்களின் சேவை நயப்பு விழா நாளில் அவரினால் திறந்து வைக்கப்பட்டது. விடுதியில் விருந்தினர் தங்குவதற்கும் மாணவர்களைச் சந்திப்பதற்கும் ஒரு குடில் விடுதி முன்பாக அமைக்கப்பட்டது. இக்குடிலை சப்ரகமுவ மாகாணத்திலிருந்து சகோதர சங்கம நிகழ்விற்கு வந்தவர்கள் மகிழ்ச்சியாக பயன்படுத்தினார்கள். மாலைவேளை விடுதி மாணவர்கள் குழுக்கலந்துரையாடலுக்கும் கற்றலுக்கும் பயன்படுத்தி வருகின்றார்கள்.

இதற்குப்பயன்படுத்திய சில மரங்களும் ஓடும் கடற்படையினா் தந்துதவினார்கள்.(அவ்வாறு மரங்களை அப்புறப்படுத்தும்போது புடையன் பாம்பு ஒன்று கல்லூரி ஊழியரினால் அடிக்கப்பட்டது).

- மாணவா் விடுதி மெதுவாக உறுதியான வளர்ச்சியைக்கண்டு வருகின்றது. கடல் கடந்த தீவுகளில் உள்ள மாணவர்கள் வருகைத்தர தொடங்கியுள்ளனா். தற்போது 12 மாணவா்கள் தங்கியுள்ளனா். 2014 2ஆம் தவணையில் எழுவைதீவில் இருந்து சில மாணவா்கள் வருகை தருவதற்கு விண்ணப்பித்துள்ளனா்.
- விளையாட்ட மைதானத்தின் காணி உறுதிகள் ஒழுங்கு செய்யப்பட்டு விளையாட்டு மைதானத்திற்கான நெற் வேலி அமைக்கப்பட வேண்டிய தேவை உள்ளது. அத்துடன் விளையாட்டுத்துறையை மேம்படுத்துவதற்கான செயற்றிட்டங்கள் முன்மொழியப்பட்டு கொடையாளர்கள் (அனுசரணையாளா்) இனங்காணப்பட வேண்டும்.
- எம்முன் உள்ள மிகப்பெரிய சவாலக தற்போதுள்ளது ஆசிரியா் பற்றாக்குறையாகும். கணிதம், விஞ்ஞானம், தமிழ், உட்பட 8 ஆசிரியா்கள் பற்றாக்குறை நிலவுகின்றது. இதுபற்றி கல்வித்திணைக்களத்திற்கு தெரியப்படுத்தியுள்ளோம். அத்துடன் ஓரளவு சீா் செய்வதற்கு தற்போது கல்வியியற் கல்லூரி தலைவராக இருக்கும் எமது பழைய மாணவா் திருமிகு.ச.அமிா்தலிங்கம் அவா்களை தொடர்பு கொண்டோம் அவா் இவ் வருடம் 3 முகிழ்நிலை ஆசிரியா்களைத்தந்து ஊக்கப்படுத்தியுள்ளாா்.

***பக்தியுடையார் காரியத்திற்***
***பதறார், மிகுந்த பொறுமையுடன்***
***வித்து முளைக்குந் தன்மைபோல்***
***மெல்லச் செய்து பயனடைவார்,***
***சக்தி தொழிலே யனைத்துமெனிற்***
***சார்ந்த நமக்குச் சஞ்சலமேன்?***
***வித்தைக் கிறைவா கணநாதா,***
***மேன்மைத் தொழிலிற் பணியெனையே,***

என்ற மகாகவியின் கவிவரிகளை நினைவிற்கொண்டு நாம் அனைவரும் மெதுவாகவும் உறுதியாகவும் வேலணை மத்திய கல்லூரித்தாயின் மேம்பாட்டிற்காக பயணிப்போம்.

மகிழ்வுடன்

**சிவசாமி கிருபாகரன்**
முதல்வா்
வேலணை மத்திய கல்லூரி
2014.04.20